## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன, என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 12 நூல் நிலையங்களிற்கு ரூபா 1,041,246 பெறுமதியான 2,276 புத்தகங்கள் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அவை நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | நன்கொடைப் புத்தகங்களை எதிர்வரும் ஆண்டில் கணக்குகளில் சொத்தாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் அமைக்கப்பட்ட உழவு இயந்திர கூடாரம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களின் பெறுமதிகள் ரூபா 281,400 நிதிக்கூற்றுக்களில் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | பிறிண்டர் மற்றும் கைவிரல் அடையாள இயந்திரம் போன்றவற்றை எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றில் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஏறாவூர்பற்று பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய திண்மக் கழிவு நிலைய நிலநிரப்பல் கட்டணம் ரூபா 138,070 தொகை என்பன நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் இத்தவறுகளை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்களை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | திண்மக்கழிவு நிலையத்திலுள்ள பெறுமதி குறிப்பிடப்படாத 31 நிலையான சொத்துக்கள் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் இவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு சொத்தாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திண்மக்கழிவு நிலையச் சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 26,086,209 பெறுமதியான 10 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி கட்டடங்கள், பொறி, மோட்டார் வாகனங்கள், தளபாடங்கள் போன்ற நிலையான சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிடுவதற்கும் வாகனங்களின் உரிமையை மாற்றம் செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களுக கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக்கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- | --- |
| | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | இல.371(2)(ஆ) | சபையினால் கடந்த 10 ஆண்டு காலப்பகுதிகளில் வழங்கப்பட்ட ரூபா 1,335,076 தொகை முற்பணக் கொடுப்பனவுகள் மீளாய்வாண்டு இறுதிவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை | விபரங்களில்லாத முற்பணக் கொடுப்பனவுகளை சீர்செய்வதற்கு திணைக்களத் தலைவரின் ஆலோசனை யினைக் கோரியுள்ளோம். | முற்பணக் கொடுப்பனவு களை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | இல.571(1), (2), (3) | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த 36 வைப்புக்கள் ரூபா 867,400 தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | காலங்கடந்த வைப்புக்களை சபை வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலங்கடந்த வைப்புக்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 42,837,658 ஆக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 7,605,386 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,875,000 | 7,724,910 | 7,445,980 | 3,436,600 | 3,050,000 | 7,342,800 | 6,689,430 | 3,157,670 |
| வாடகை | 18,033,000 | 15,273,841 | 17,867,637 | 4,325,850 | 17,737,000 | 9,085,657 | 17,491,824 | 6,919,645 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,900,000 | 2,774,040 | 2,774,040 | - | 1,825,000 | 2,591,510 | 2,591,510 | - |
| ஏனைய வருமானம் | 4,425,000 | 3,582,737 | 3,614,087 | 1,656,338 | 43,610,000 | 55,040,481 | 55,040,803 | 5,005,689 |
| | 29,233,000 | 29,355,528 | 31,701,744 | 9,418,788 | 66,222,000 | 74,060,448 | 81,813,567 | 15,083,004 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி 2023 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 3,436,600 தொகை அறவிட வேண்டியதாக இருந்தது. அப்பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டிற்கும் இடையிலான ரூபா 3,157,670 ஆன மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. | நிலுவைத் தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | வீதவரி நிலுவைகளை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதி வரை 12 வாடகைதாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய வாடகை நிலுவைத் தொகையான ரூபா 556,376 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | வாடகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை 63 குத்தகைதார்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய குத்தகை வருமானம் ரூபா 3,629,224 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1985-2009 காலப்பகுதிகளில் நாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அறவிடப்படவில்லை. எனவே இது தொடர்பாக திணைக்களத் தலைவருக்கு அறிக்கையிட்டு பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குத்தகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2023 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன முறையே ரூபா 19,877,903 மற்றும் ரூபா 18,114,773 ஆகும். | எதிர்வரும் ஆண்டில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான முத்திரைக் கட்டண வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|
| (அ) | 10 வருடங்களுக்கு மேலாக நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டுவரும் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட முற்பணக் கொடுப்பனவு ரூபா 167,580 மற்றும் மின்சார சபைக்கு செலுத்தவேண்டிய ரூபா 2,069,410 தொகைகளினையும் மற்றும் பத்து வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாமல் ஏனைய வருமான நிலுவையாகக் காட்டப்பட்டுவரும் ரூபா 1,656,338 மின்சாரக் கட்டண நிலுவைத் தொகைகளினையும் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந் நிலுவைகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நீண்டகால முற்பண, செலுத்த வேண்டிய மற்றும் ஏனைய வருமான நிலுவைகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 53 காணி, கட்டடங்கள் மற்றும் 27 மோட்டார் வாகனங்களின் பெறுமதிகளினை மீயாய்வாண்டின் இறுதி வரைக்கும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. . | மீள்மதிப்பீடு செய்வதற்கு எதிர்வரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சொத்துக்களின் பெறுமதிகளை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 தொடக்கம் 2023 ஆம் ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட 1,286 கட்டிட விண்ணப்பங்களில் 354 விண்ணப்பங்கள் முறைப்பாடு, காணிப்பிரச்சினை, ஆவணக்குறைபாடுகள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தாமதம் காரணமாக அனுமதி வழங்கப்படாமல் காணப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் இத்தவறுகள் சீர்செய்யப்படும். | கட்டிட விண்ணப்ப அனுமதிகளை தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஏப்ரல் 17 ஆந் திகதியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானி இல.597/8 இனால் வெளியிடப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுங்குவிதியின் உப பிரிவு 6(11), (111) இன் பிரகாரம், அனுமதியின்றிய நிர்மாணிக்கப்பட்ட பெரிய கல்லாறு திருமண மற்றும் கலாச்சார மண்டப கட்டிடத்திற்கான தண்டப்பணமான ரூபா 459,980 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதியாகவுள்ள தண்டப்பணத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தண்டப் பண நிலுவையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையில் பழுதடைந்து காணப்படுகின்ற 02 வாகனங்களை திருத்துவதற்கும், பயன்படுத்த முடியாமல் காணப்படுகின்ற 03 வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை திருத்துவதற்கும் மற்றும் திருத்த முடியாத நிலையிலுள்ள வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை திருத்துவதற்கும் பயன்படுத்த முடியாத வாகனங்களை அகற்றுவதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, 17 வெற்றிடங்களை நிரப்புவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு வெற்றிடமாகவுள்ள ஆளணி தொடர்பாக கோரிக்கை விடப்பட்டும் எவ்விதமான முன்னேற்றமும் எட்டப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற, மரணித்த மற்றும் பதவி இடைநிறுத்தப்பட்ட 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் நிலுவையான ரூபா 601,440 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடர்கடன்களை ஓய்வூதியப்பணம், மரணப் பணிக்கொடையிலிருந்தும் மற்றும் சம்பளமற்ற விடுமுறையிலுள்ளவர்களிட மிருந்து விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஊழியர் கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கிணங்க 08 மர ஆலைகள், 04 வெதுப்பகங்கள், 01 கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம் மற்றும் 01 வாகனம் திருத்தும் நிலையம் என்பவற்றின் காலாவதியான சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு கடந்த 03 வருட காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வியாபார நிலையங்களின் சுற்றாடல் அனுமதி பத்திரத்தினை புதுப்பித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தினை புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |